ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,077 — 1960 මාර්තු 11 වැනි සිකුරාදා — 11.3.1960

12,077 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 15 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்-வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டம்

1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின்கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்து நாரந்தனை கிராமப் பகுதியின் கிராமச்சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு, "செனற்" சபையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1953 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ந் திகதி வெளியான 10,560 ம் இலக்க "கெசெற்" றில் அறிவிக்கப்பட்ட பிரமாண உபவிதிகளின் 1 முதல் 37 ஈறாகவுள்ள பாகங்களை இத் தீர்மானம் "கெசெற்"றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக் கொள்ளுவதென்று நாரந்தனைக் கிராமச் சங்கம், 1952 ம் ஆண்டின் 6 இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.

நா. கந்தப்பு,
தலைவர்.

கிராமச் சங்கம்,
நாரந்தனை,
28.1.1960.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு சித்திரை (எப்றில்) மாதம் 1 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 26 ந் திகதி சனிக்கிழமை பி. ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மீ 1 ந உ.